**செய்தி வெளியீடு எண். 278** **நாள் : 19.4.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று (19.4.2020) இரவு 7.30 மணி அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமிழகத்தில் கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து கேட்டார்.

அதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்புப்பணிகள் குறித்து விளக்கமாக தெரிவித்தார். மேலும் தமிழ்நாட்டில் அதிகமாக பரிசோதனைகள் செய்ய வேண்டியுள்ளதால், எங்களுக்கு அதிகமான Rapid Test Kits-ஐ வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அதற்கு மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் Rapid Test Kits–ஐ வழங்குவதாக தெரிவித்தார்.

*****

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**